முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1628

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.03.2024**, வியாழக்கிழமை

1. கருணையே வடிவான அரங்கனே
   கலியுகத்தின் அறமிக்க ஞானியே
   பெருமைமிக்க ஞான உலகம் படைக்க
   பிரணவக்குடில் படைத்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
   அருளுவேன் சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் முதல் நாள், 14.03.2024, வியாழக்கிழமை)
   வரமென அரங்கனுக்கு நித்தம் நித்தம்
   வடிவேலன் யான் ஆற்றல் பெருக்கி வர
3. வருகின்ற காலம் அரங்கன் தலைமையிலே
   வையகமெல்லாம் ஞான ஆட்சிக்காலமாக
   தருகின்ற குணம் கொண்ட தர்மவான்கள் நிறைந்த
   தன்னார்வ தொண்டுகள் மிகுந்த பூமியாக
4. ஆகவே உலக மாற்றம் கண்டு
   அறிவிப்பேன் வானவர்கள் வியக்க
   மக்களெல்லாம் மகிழும் படி ஞான ஆட்சி
   மகத்துவம் கொண்ட ஞானியர்கள் நடத்துகின்ற ஆட்சியாக
5. ஆகவே மாற்றம் காணக்கூடும்
   அப்பனே அரங்கனைக் கொண்டு
   இந்த அற்புதத்தை அகிலத்தில்
   ஆறுமுகன் யான் நடத்த உள்ளேன்
6. வரம் பெற அரங்கனின் சீடர் பெருமக்கள்
   வணங்கி ஓங்காரக்குடில் நோக்கி தொடர்ந்துவர
   வருகவருக வையகத்தில் மாற்றம்
   வள்ளல் தன்மை கொண்ட அரங்கன் சக்தி மூலம்
7. தர்மவான்கள் நிறைந்த ஞான ஆட்சிக்காலமாக
   தலைவனாக ஆறுமுகன் யான் முன்னின்று நடத்தும் சூட்சும பலமுமாக
   ஆகவே மாற்றம் கண்டு
   அகிலம் உலகமாற்றம் தனைகாணும்

8. காணவே ஓங்கார ஞானி
கட்டளையாக வழங்குகின்ற
தானதர்ம நெறிகளையும்
தக்கபடி சுத்த சைவ நெறிமுறையையும்
9. முறையாக ஏற்று மக்கள் வந்தால் போதும்
முழுமை பெற்ற ஞான ஆட்சிக்காலமாக
ஞான சித்தர் காலமுமாக மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–